# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# C.C. No.1286/2022 P.W.4

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | விஜயகுமார் | த–பெ | வேலு |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 44/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | மெடிக்கல் ரெப் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.02.2026**

**எதிரிகள் ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து மெடிக்கல் ரெப்பாக பணி செய்து வருகிறேன். நானும் பாலுக்கரசு என்பவரும் 20.06.2019 அன்று காலை 9.30 மணியளவில் இடம் பார்ப்பதற்காக பாரிநகர் குமணன் தெருவில் சென்று கொண்டிருந்த போது அங்கு காரைக்குடி வடக்கு போலீசார் சம்பவயிடத்தில் ரமேஷ் என்பவர் வீட்டின் முன்பாக வழக்கு ஒன்று குறித்து சம்பவயிடத்தை பார்வையிட்டு விசாரணை செய்து அங்கு அவர்கள் தயார் செய்த பார்வை மகஜர்ஆவணத்தில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.3.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் எந்த மெடிக்கலில் ரெப்கா இருக்கேன் என்றால் கிளீனிக் பையோ பார்மாடிக்கல்ஸ் கம்பெனி. நான் எத்தனை மணிக்கு வேலைக்கு செல்வேன் என்றால் காலை 10.00 மணிக்கு செல்வேன். நான் யாருக்கு இடம் பார்க்க சென்றேன் என்றால் பாலுக்கரசு என்பவர் இடம் காண்பிப்பதற்காக நான் அவரோடு சென்றேன். பாரி நகரில் எந்த இடம், யாருடைய இடம் பார்ப்பதற்கு சென்றேன் என்றால் நியாபகம் இல்லை. எந்த தேதியில் சென்றேன் என்றால் நியாபகம் இல்லை. எந்த ரோடு வழியாக சென்றேன் என்றால் பாரதிநகர் வழியாக பாரி நகருக்கு சென்றேன். என்னை யார் நிறுத்தினார்கள் என்றால் போலீசார் நான் குமணன் தெரு வழியாக செல்லும் போது நிறுத்தினார்கள். அப்போது அவர்கள் அங்கு வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள் அதில் நான் கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை எங்கு செல்கிறாய் என்று விசாரித்தார்கள்

பின்னர் போக சொல்லிவிட்டனர். என்னிடம் கையொப்பம் பெற்றார்களா என்றால் கையொப்பம் பெற்றார்கள். எதற்காக கையொப்பம் பெற்றார்கள் என்றால் போலீசார் வரைபடம் வரைந்தார்கள் என்பதற்காக போட்டேன். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று நான் படித்து பார்க்கவில்லை. யார் வரைபடம் வரைந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் மட்டும் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். வேறு யாரிடமாவது கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. போலீசாருடன் அந்த தெருவை சேர்ந்தவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். வீட்டின் முன்பு வழக்கின் எதிரியான ரமேஷ் என்பவரும் நின்று கொண்டிருந்தார். பெண்கள் வேறு யாரும் இல்லை. ரமேஷ் என்பவரின் மனைவி தற்கொலை செய்து கொண்டது சம்மந்தமாக விசாரணை செய்து கொண்டிருப்பதாக போலீசார் கூறினார்கள். பாலுக்கரசு என்பவரும், ரமேஷ் என்பவரின் மனைவியின் தாயார் மனிமேகலை என்பவரும் உறவினர் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை, பாலுக்கரசு எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக இந்த வழக்கில் சாட்சி கையொப்பம் போட்டதால் காவல் நிலையத்தில் சென்று புகார்தாரருக்கு ஆதரவாக போலீசார் கொடுத்த ஆவணத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல் லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.04 10:14:34 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.